அசல் வழக்கு எண். 2/2019

நாள் : 24.04.2025

வா.சா. : 1

பெயர் : ரமேஷ்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. 1ம் பிரதிவாதி செல்லப்பன் என் அப்பா என்றால் சரி. 2ம் பிரதிவாதி லட்சுமி என் தாயார் என்றால் சரி. 3ம் பிரதிவாதி என்னுடைய சகோதரி என்றால் சரி. 1, 2 பிரதிவாதிகளுக்கு நாங்கள் இரண்டுபேர் தான் வாரிசுகள் என்றால் சரி. நான் இந்த வழக்கில் ஐந்து இன சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை கோரியுள்ளேன் என்றால் சரி. அதில் முதல் இன சொத்து என்பது சீர்காழில் உள்ள கடைகள் வீடு சேர்ந்த காம்ப்ளக்ஸ் என்றால் சரி. 2, 3, 4 இன சொத்துக்கள் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வேலம்பாடி என்ற கிராமத்தில் உள்ளது. அந்த சொத்துக்களில் வீடு எதுவும் இல்லை என்றாலும் சாகுபடி செய்யக்கூடிய நஞ்சை நிலம் என்றாலும் சரி. 5ம் இன சொத்தும் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வேலம்பாடி என்ற கிராமத்தில் உள்ளது என்றால் சரி. 2, 3, 4 இன சொத்துக்கள் என் அப்பாவிற்கு வாரிசு முறையாக கிடைத்த முன்னோர்கள் சொத்துகள் என்றால் சரி. 1ம் இன சொத்து என் அம்மா பெயரில் உள்ளது என்றால் சரி. என் அம்மா பெயரில் என் அப்பா வாங்கிய சொத்து. 5ம் இன சொத்து என் அப்பா பெயரில் உள்ளது என்றால் சரி. 1966ல் எனது அப்பா வழி தாத்தாவிற்கும் அவரது அண்ணனுக்கும் ஏற்பட்டபாகப்பிரிவினை மூலம் என் தாத்தாவிற்கு கிடைத்து சொத்துக்கள் 2, 3, 4 இன சொத்துக்கள் என்றால் சரி. என் அப்பா வழி தாத்தா சுமார் 38 வருடத்திற்கு முன்பு இறந்து போனார். என் தந்தை வழி தாத்தா ஆரப்ப கவுண்டருக்கு என் அப்பா செல்லப்பன் (1ம் பிரதிவாதி) திருமலை சாமி, சுப்ரமணி (இறந்துவிட்டார்) வாரிசுகள். வாசாஆ 11 ஆவணத்தில் கண்ட

பாகப்பிரிவினை எப்போது ஏற்பட்டது என்றால் 2011ல் ஏற்பட்டது. என் அப்பாவிற்கு 2011ம் வருடத்தில் தான் பூர்வீக சொத்துக்கள் கிடைத்தது என்றால் சரி. ஆனால் அதுவரை என் அப்பா தான் அனுபவித்து வந்தார் என் அப்பா தான் பிரித்து கொடுத்தார். என் அப்பாவிற்கு என்ன தொழில் என்றால் டீக்கடை வைத்திருந்தார். நான் பிறந்தது சீர்காழி. என் அப்பா கரூர் மாவட்டத்தை விட்டு சீர்காழி வந்தபிறகு நான் பிறந்தேன் என்றால் சரி. என் அப்பா பிழைப்பிற்காக வந்தார். தற்போது எனக்கு 51 வயதாகிறது. சுமார் 51 வருடத்திற்கு முன்பே என் அப்பா கரூர் வேலம்பாடி கிராமத்தை விட்டு சீர்காழிக்கு வந்துவிட்டார் என்றால் சரி. கரூரில் உள்ள வேலம்பாடி கிராமத்தில் உள்ள நிலங்களில் சீர்காழியில் டீக்கடை வைத்திருக்கும் என் அப்பா சாகுபடி செய்ய முடியுமா என்றால் முடியும். இரண்டுபோகம் சாகுபடி செய்ய முடியும். மழை பெய்யும்போதும் கிணற்றில் இருந்து நீர்பாய்ச்சியும் சாகுபடி செய்வார். என் தாத்தா இறக்கும் வரை பூர்வீகசொத்துக்கள் என் தாத்தா வசம் மற்றும் அனுபோகத்தில்தான் இருந்தது என்றால் சரி. என் தாத்தா பார்த்துக்கொண்டார் என் அப்பா அவருக்கு உதவியாக இருந்தார். பூர்வீக சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் என் தாத்தாவிற்கும் அவரது மூன்று மகன்களுக்கும் பங்கு உண்டு என்றால் சரி. ஆனால் என் சித்தப்பாக்கள் ஆந்திராவில் இருந்தார்கள் என் அப்பா மட்டும் தான் தாத்தாவுடன் இருந்தார். கிராமத்தில் இருந்த நிலங்களை சித்தப்பா திருமலை சாமி தான் சாகுபடி செய்தார் என்றால் தவறு. சீர்காழியில் உள்ள 1ம் இன சொத்து 1985 ல் வாங்கப்பட்டது. அப்போது எனக்கு 11 வயதிருக்கும். பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தில் இருந்து சீர்காழியில் உள்ள 1ம் இன சொத்து வாங்கப்பட்டது என்று என் அப்பா என்னிடம் சொன்னாரா என்றால் ஆமாம். சீர்காழியில் உள்ள 1ம் இன

சொத்து என் அப்பாவின் டீக்கடை வருமானத்திலிருந்து கிடைத்த பணத்தை கொண்டும் என் தாயாரின் நகைகளை விற்றும் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. என் அப்பா பிழைப்பதற்காக சீர்காழி வந்தார். என் அம்மாவிற்கு நகைகள் எதுவும் இல்லை. பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த சாகுபடி வருமானத்திலிருந்தும் என் அப்பாவின் டீக்கடை வருமானத்திலிருந்தும் தான் சீர்காழியில் உள்ள 1ம் இன சொத்து வாங்கப்பட்டது. கரூர் சொத்துக்களில் இருந்து போதிய வருமானம் இல்லை என்றாலும் அதனால் பிழைப்பிற்காகத்தான் சீர்காழி வந்தோம் என்றால் அந்த சொத்துக்களில் இருந்து போதிய வருமானம் இல்லை என்பது சரி. வேலம்பாடி கிராமத்தில் உள்ள சொத்துக்கள் மானாவாரி சொத்துக்கள் என்றாலும் மழை பெய்தால் புஞ்சை நிலத்தில் சாகுபடி செய்யும் தானியங்களை தான் சாகுபடி செய்யமுடியும் என்றால் சரி.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக 05.06.2025 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்க
அதனை என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு. அவர் என் முன்பு
ஆணையின் பேரில் தட்டச்சு செ
எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதி
மயிலாடுதுறை